
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 3 | செப்டம்பர் 1990 | இதழ் 9

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர்:-

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

## கோவை மாவட்ட
## திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

நாள் : 17-10-90 புதன்கிழமை

நேரம் : காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை

இடம் : 32 பட்டேல் தெரு, ரத்தினபுரி
கோவை-641027.

நோக்கம் : இதழ் மேம்பாட்டு ஆலோசனைகளும்
கருத்துப் பரிமாற்றங்களும்.

திருமறை வாசக அன்பர்கள் குடும்பத்தோடும் நண்பர்களோடும் வருகை தர வேண்டுகிறோம்.

இவண்,
**விழாக் குழுவினர்.**

தொடர்பு முகவரி :
**சகோ. மேன்யல் M. சாமுவேல்**
நற்செய்தி உரைஞர்,
கிறிஸ்துவின் சபை,
32, பட்டேல் தெரு.
ரத்தினபுரி, கோவை-641027.

## இதழின் உள்ளே


1) ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்! 1 - 9

2) தொண்டு செய்வதிலும், கொடுப்பதிலும் கிடைக்கக் கூடிய மகிழ்ச்சி. 10 - 16

3) இழப்பே ஆதாயம் 17 - 23

4) இயேசு விரைவில் வருகிறாரா? 24 - 28

# THIRUMARAI AASAAN

Editor :
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J. C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India
Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol 3.** **September—1990** **Issue 9**

**ஆசிரியவுரை**

## ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்!

"உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்" என்ற எபிரேயர் 3 : 13 ஆம் வசனத்துடன், "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி; நம்மைச் சுத்திகரிக்கும்" என்ற 1 யோவான் 1 : 7 ஆம் வசனத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். இரண்டு வசனங்களிலும், பாவமும் அதினின்று விலகும் வழியும் குறிக்கப்பட்டுள்ளது. முதலாவதில் புத்தி சொல்லுவதினாலும் இரண்டாவதில் ஒளியில் நடப்பதினாலும் பாவத்திற்கு விலக ஆலோசனை அளிக்கப்பட்டுள்ளது. இரண்டையும் இணைப்பின், இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி, அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் நம்மில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாமல் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்மைச் சுத்திகரித்துக்

கொண்டிருக்கும் என்று சொல்லலாம். இதிலிருந்து புத்தி சொல்லி பாவத்தை விலக்குதல் ஐக்கியத்தின் முக்கிய அம்சம் என்பது தெளிவாகிறதல்லவா?

I நாம் புத்திசொல்லத் தவறுவதின் காரணங்களை இங்கு ஆராய்ந்து பார்ப்போம்.

(அ) கரிசனையின்மை

ஒருவரிடம் ஒரு குறையைக் கண்ட மாத்திரத்தில் பொதுவாக நமது இருதயம் எரிச்சலினால் நிறைவதால் கரிசனை காட்டத் தவறி விடுகிறோம். இம்மனப்பான்மை சிந்தனையை மறக்கச் செய்யும். பிறருடைய முன்னேற்றத்தை நாடுவதே கரிசனை. ஆனால் எரிச்சல் கரிசனையை அணைத்து விடும். நாம் நம்மிலுள்ள இந்த ஆவியைக் கடிந்துகொண்டு, பிறனுடைய குற்றத்தைக் கண்டவுடன் அவன்மேல் கரிசனை கொள்ளும் பழக்கத்தை உருவாக்கவேண்டும். இது கடின-மாய்த்தோன்றினாலும், பிறனைக் கிறிஸ்துவின் சரீரத்தின் ஓர் அவயமாக தேவநோக்குடன் பார்த்தால் இலகுவாகிவிடும். தேவன் அவனை எப்படிப் பார்க்கிறாரோ அப்படிப் பார்க்க வேண்டும். ஒருநாள் யாக்கோபும் யோவானும் தாயின் சிபாரிசுடன் இயேசுவை அவரது வலது இடது பாரிசத்திற்காக அணுகினர். "*மற்றப் பத்துப்பேரும் அதைக்கேட்டு, அந்த இரண்டு சகோதரர் பேரிலும் எரிச்-சலானார்கள்*" (மத் 20 : 24). பத்தில் ஒருவர்கூட அந்த இரு-வருக்குப் புத்திசொல்லி அவர்களை சீர்திருத்த வகைபார்க்கவில்லை. யாக்கோபு யோவானின் பேராசையையும், பத்துப்பேரின் எரிச்-சலையும் இயல்பான குறைகளென இயேசு புரிந்து கொண்டவராய் அவர்களை ஆக்கினைக்குள் தீர்க்காமல் அச்சூழ்நிலையை அவர்களுக்குத் தாழ்மையைப் போதிக்கப் பயன்படுத்திக் கொண்டார். இயேசு குறுகின நோக்குடையவராயிராமல் அந்தப் பன்னிரண்டு பேரையும் பரலோகப் பண்புகளில் வளர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டி-ருந்தார். எவ்வளவு கரிசனை கொள்ளுகிறீர்களோ அவ்வளவு சலிக்-காமல் புத்தி சொல்லுவீர்கள். பவுல், "மூன்று வருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக் கொண்டு வந்தார்" (அப் 20 : 31).

### (ஆ) குற்றம்சாட்டும் மனப்பான்மை

கரிசனையினால் நிறைந்த உள்ளம் கடிந்து கொள்ளும்; ஆனால் எரிச்சலின் ஆவியினால் அனல் கொண்ட உள்ளமோ குற்றசாட்டைக் கக்கும். பல வேளைகளில் நாம் புத்திசொல்லத் துவங்கி குற்றஞ்சாட்டிவிடுகிறோம். நாம் புத்திசொல்லும் முறையானது அவனைவெறுப்படையச் செய்யாமல் தன் குற்றத்தை நிதானித்தறிய அவனைத் தூண்டிவிடுவதா யிருக்க வேண்டும். அவனைக் குற்றம் கண்டுபிடிக்காமல் பக்தி விருத்தி யடையச் செய்தலையே நமது குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். வேறுவிதத்தில் சொன்னால் நாம் கவனமாயிராவிடில் புத்தி சொல்லப் போய் நியாயம் தீர்த்துவிடுவோம். இக்கொடிய பாவத்தைக் குறித்தே மத்தேயு 7 :-1-5 இல் இயேசு நம்மை எச்சரிக்கிறார். இதுவே சீஷரின் பட்சிக்கும் ஆவி. இயேசுவோ அவர்களைக் கடிந்துகொண்டு, நாம் ஜீவனை அழிக்கும் மனப்பான்மை உடையவர்களாயிராமல் இரட்சிக்கும் மனப்பான்மை உள்ளவர்களாயிருக்க வேண்டும் என்றார் (லூக் 9 : 54-56). பெரும்பாலும் நாம் இரட்சிக்கும் மனப்பாங்கோடு செய்யாமல் முறிக்கும் மனப்பான்மையோடே செய்கிறோம் என்பதை நாம் மறுக்க முடியாது. அவனை அணைத்துப்போடும்படி அல்ல. அவனது ஆவி, ஆத்துமா, சரீரத்தைக் காப்பாற்றும் சிந்தையோடே புத்தி சொல்வதவசியம். நம்முடைய புத்திசொல்லுதலோ பிறனது குற்றத்தை நிரூபித்து நாமே சரி என்று காண்பிக்கும் குறியுடையதால் அதன் பலனை இழந்துபோய் நம்மையும் புத்திமதி சொல்லிவிட்டோம் என்ற சுயதிருப்திக்குப் பலியாக்கிவிடுகிறது. ஆனால் பவுலும், சில்வானும், தீமோத்தேயும் *''தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல''* புத்தி சொல்லினர். (1 தெச 2 : 11). *அவர் நியாயத்திற்கு ஜெயங் கிடைக்கப்பண்ணுகிற வரைக்கும், நெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கியெரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார்''* (மத் 12 : 20)

### (இ) பயம்

நமது சிநேகத்திற்கு பாதகம் வரும் அல்லது தவறாய்ப் புரிந்து கொள்ளப்படுவோம் என்றதயக்கத்தினால் இருதயத்தில் எழும் புத்திமதியை நாம் அடிக்கடி நாவிலே அடக்கிவிடுகிறோம். புத்திசொல்ல கிரயம் செலுத்த வேண்டி வரலாம். யோவான் ஸ்நானகன் தன் தலையையே அதற்காக கிரயம் செலுத்த வேண்டியதாயிற்று பயம்

ஒரு கண்ணி, நானும் என் மனைவியும் ஒரு குடும்பத்தினரோடு சில நாட்கள் தங்கியிருந்தோம். எங்களைச் சந்திக்க வந்த நண்பரொருவர் அவர்கள் குடிப்பதாகவும் விசேஷ தினங்களில் மதுபானம் பரிமாறு வதாகவும் கூறினர். இது என்னை அதிகக் கவலைக்குள்ளாக்கி நிம்மதி யிழக்கச் செய்தது எனக்குள் ஒரே போராட்டம் இவர்களுக்காய் நான் ஜெபித்து அதோடு விட்டு விடுவதா? அல்லது புத்தி செல்லி ஒருவேளை அவர்கள் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்வதா? கடைசியாக எப்படியானாலும் கேட்டு விடுவது என்று தீர்மானித்து விட்டேன். மெதுவாக அந்த சகோதரியிடம் காரியத்தை விசாரித்தேன். நான் கேட்ட மாத்திரத்தில் அவர்கள் கண்கள் குளமாயின. அந்த வாசனையே அவர்கள் வீட்டில் கிடையாதென்றும் தங்களைப் பற்றி சிலர் வதந்திகளைப் பரப்புவதாகவும் சொன்னார்கள். எனக்குச் சொன்ன நண்பரைப்பார்த்து, இவர்கள் குடிப்பது அவருக்கு எப்படித் தெரியும் என்று அன்றே வினவினேன். சற்று தயக்கத்துடன் “யாரோ சொன்னார்கள்” என்றார். கேள்விப்படுவதை நம்பி செய்தியை கடத்தவேண்டாம் என்றேன். அன்று நிம்மதியாய்த் தூங்கினேன். புறங்கூறுதலுக்கு அணை கட்ட புத்திசொல்லுதல் எத்தனை அவசியம்! தவருப்புரிந்து கொள்வார்களோ என்று தயங்கியிருந்தேனானால் நானே பொய்யை நம்பி தவருய்ப் புரிந்து கொண்டு புறங்கூறியும் இருப்பேன்; மகிமையானதோர் அனுபவத்தை இழந்து போயிருப்பேன் அக்கூற்று மெய்யாயிருந்திருப்பினும் அவர்களுக்குப் புத்தி - சொல்லியிருப்பேன். அதற்கு ஆயத்தமாகத்தான் சென்றேன். பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்.

**II** *புத்திசொல்லுதல் இருபுறச் சார்பானது “ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்” புத்தி சொல்ல எல்லோருக்கும் பிரியம்; ஆனால் புத்தி சொல்லப்பட விரும்புவோர் வெகுசிலரே! ஏன்?*

**(அ) மேட்டிமை**

நம்து கீழ்மையிலுள்ள உத்திரமானது நம்மை நாமே பார்ப்பதற்கு இடையூருயிருந்தாலும் பிறரைப் பார்க்க அனுமதிக்கிறது. நம்மிலுள்ள பெரும் பாதகங்களுக்கும் சிறு குற்றங்களுக்கும் எவ்வளவு குருடாயிருக்கிறோமென்பதை இயேசு மத்தேயு 7 : 1-5 இல் அருமையாய் எடுத்துரைக்கிறார். “முன்பு” உத்திரத்தை எடுத்துப்போடச் சொல்லு

கிறார். அதாவது புத்தி சொல்லுவதைக் காட்டிலும் "முன்பு" புத்திமதியை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்க வேண்டும். "பின்பு" உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போட வகை பார்ப்பாய். வேறுவிதமாய் இதை விளக்கினால், புத்திமதியை ஏற்றுக் கொள்ள மனதற்றவன் புத்திசொல்லத் தகுதியற்றவனாகிறான் பவுலைப் போன்ற கடினமான தலைவனின் புத்திமதிகளை ஏற்றுக்கொண்டதால் தீமோத்தேயு தழைத்தான். ஏற்றுக்கொள்ளத் தயங்கியவர்கள் திசைமாறினர்.

தாவீது அரசனின் ஆவி எளிமையாயிருந்தபடியால் எவரும் அவனுக்குப் புத்திசொல்ல முடிந்தது. தீர்க்கதரிசிகளும், அவரது சேவகரும், ஒரு பெண்ணும் கூட அவனுக்குப் புத்தி கூறினர் (II சாமு 14). எண்ணற்றோருக்குப் புத்தி புகட்டும்படியாய் "விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தாணி" நாவை தேவன் அவனுக்கு அருளியதில் வியப்புண்டோ? யாக்கோபு சொல்லுகிறதுபோல, "யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும் கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக் கடவோம்" (1 : 19)

## (ஆ) தொட்டால் சிணுங்கித்தனம்

முதற் குறிப்பில் நமது குறைகளை நாம் அறியாதிருக்கிறோம். ஆனால் இங்கு நமது குறைவையும் அதை நிவிர்த்தி செய்யும் தேவையையும் அறிந்தும் பிறர் அதைச் சுட்டிக் காட்டுவதை வெறுக்கிறோம். "இப்படி" செய்வதை "அப்படி" செய்யுங்களேன், என்று யாராவது சொல்லிவிட்டால், "அப்படி" செய்தல் எத்தனை மேன்மையான முறையாயிருப்பினும் அதை ஏற்றுக்கொள்ள மனமற்று முணங்குகிறோம். எளிதில் புண்படும் இத்தன்மையினால் பல காரணங்களைச் சொல்லி பிடிவாதமாய் நமது முறையையே விடாது செய்கிறோம். ஒரு சிறு திருத்தம் கண்களில் நீரை வருவிக்கும். அல்லது உன்-வேலையைப் பார்' பதிலைப் பிறப்பிக்கும். நீதி. 11 : 2ஐ வாசிக்க. அவனது கடுஞ் சொல்லுக்குப் பயந்து யாரும் அவனுக்கு புத்திமதி சொல்லி அஞ்சுவதால் ஒரு "தொட்டால் சிணுங்கி" மெய் ஐக்கியத்தில் அதிக தூரம் வரமாட்டான். நடைமுறை வாழ்க்கையுல் இக்குணம் இரண்டு விதத்தில் வெளிப்படும். நீங்கள் இளையவராயிருப்பதனால் எதிர்பேச

முடியாமல் புத்திமதியை கட்டாயமாக ஏற்றுக்கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்பட்டால் உடனே மறுகோடிக்குத் தாவி விடுவதினால் உங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கிறீர்கள். சீஷரும் அப்படித்தான். மனிதர் தங்கள் எல்லா ஆஸ்திகளோடும் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென நினைப்பர். அவ்வெண்ணத்தை இயேசு திருத்த முற்பட்டால் எவருமே பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கஇயலாது என்பர்! (மத் 19 : 20-26) எத்தனை முறையும் திருமணம் செய்து மனைவியைத் தள்ளிவிடும் கொள்கையுடையவராயிருப்பர். அதனை இயேசு கண்டித்தால் திருமணமே வேண்டாமெனமுடிவுகட்டி விடுவர்! (மத் 19 : 7-10) அதே சமயம் நீங்கள் முற்கோப மூப்பராயிருந்தால் திருத்தும் இளையவரை வாயடைக்கும் பதிலைச் சொல்லி அடக்கி விடுகிறீர்கள். தாவீதுஇக்குற்றத்தில் ஒருமுறை விழுந்து விட்டாலும் பிற்பாடு அவனுடைய இருதயம் அவனை வாதித்தது. அவன் மனந் திரும்பினாலும் தன் கடின கிரியையின் கசந்த கனியை புசிக்கத் தவறவில்லை(II சாமு 24.)"*பரியாசக்காரனோ கடிந்து கொள்ளு கலுக்குச் செவிகொடான்" (நீதி 13 : 1).*

## (இ) ஆவிக்குரிய வளர்ச்சியில் அக்கறையின்மை

ஆவிக்குரிய ஜீவியத்தில் ஆழமாய்ச் செல்ல ஆசிப்பவன் புத்தி மதியை புறக்கணியாமல் ஏற்றுக் கொள்ளுவான். இதுவே பரிசுத்த முள்ளவன் அவருடைய வருகையில் இன்னும் பரிசுத்தமாக வழி. (வெளி 22 : 11, 12) அப்படி நாடி முன் செல்ல அவர் நமக்கு அளித்துள்ள பயிற்சி, நாளானது சமீபத்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறோமோ அவ்வளவாய் ஒருவருக்கொருவர் "புத்தி சொல்லுதலே". எவ்வளவு திட்டமாய் எவ்வளவு சீக்கிரமாய் அந்நாளை எதிர் பார்க்கிறோமோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும். *"ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்"* (எபி 3 : 13) வளர வாஞ்சையற்றவன் வளர்ச்சியற்று நின்றுவிடுவதோடல்லாமல் வாடிப் போகவும் துவங்குவான். புத்தி சொல்லுதலை பவுல் 'கிருபை வரங்களோடு' வரையறுக்கிறார். *"நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே..... புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும்*

தரித்திருக்கக்கடவன்'' (ரோ. 12 : 6-8). ''பரிசுத்த வான்கள் சீர்பொருந்தும் பொருட்டும்'', ''நாம் வளருகிறவர்களாயிருக்கும் படிடாகவும்'', ''தேவனுடைய மனுஷன் தேறினவனுரும்படி யாகவும்'' தேவன் சபைக்களித்த வரங்களில் இதுவும் ஒன்று.

## III புத்தி சொல்லும் முறை

### (அ) எல்லாத் தாழ்மையோடும்

.. கிருபை வரங்களை செயல்படுத்தும் முறையினை பவுல் தொடர்ந்து குறிப்பிடுகிறார். சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்'' (ரோ 12 : 10), ஊழிய வரங்களை செயல்படுத்துதலுக்கு இதுவே ஒழுங்கெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ''மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி'' (எபே 4 : 2), ''நம்மில் எவன் பெரியவன்'' என்று 'சிறு சீடர்' போட்டியிடும்போது, பெரியவர் இருவரின் முன் மாதிரியை நோக்குங்கள். ''ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரான இயேசு சொல்லுகிறார் : ''ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை என்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்'' (மத் 11 : 11) ஆனால் ''தேவனால் அனுப்பப்பட்ட ஒருமனுஷன்....யோவான்'' சொல்லுகிறான் : ''அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும். உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; பூமியிலிருந்துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனுயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான்'' (யோவான் 3 : 30, 31). இவர்கள் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுதலைக் கண்ட கண்கள் பாக்கியமுள்ளவைகள்! ''தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொண்டதால்'' இன்று சபை முடமாகி நொண்டியடிப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை! (யோவான் 5:44)

(ஆ) செம்மையாய்

தவருன புத்திமதியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். புத்தி சொல்லும்போது புத்திமதியை ஏற்றுக்கொள்ளும் தேவசித்தத்தின் மையத்தில் உங்களைக் காத்துக்கொள்ள ஜாக்கிரதையாயிருங்கள். பலமுறை அன்பினுலும் கரிசனையினுலும் மேற்கொள்ளப்பட்டவர்களாய் வசனத்திற்குப் புறம்பே புத்திசொல்லி விடுகிறேம். பேதுரு ஆண்டவரை அவ்வளவாய் நேசித்தபடியினுலே, "தேவனுக்கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கேற்றவைகளைச் சிந்தித்து" அவருடைய பாடு மரணம் என்றவுடன் அவரைக் கடிந்து கொண்டான் (மத் 16 : 23). நம்மிடம் ஆறுதலை எதிர்பார்த்து பகிர்ந்து கொள்பவருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவிக்கும்படியாய் நம்மையே அறியாமல் பலமுறை இவ்விதம் தவறு செய்கிறேம்

(இ) வசனத்தால்

தவருன ஆலோசனைகளைத் தவிர்க்க வசனத்தைக் கையாளுதல் அவசியம். "வேதவாக்கியங்களெல்லாம் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியை படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லு" (II தீமோ 3:16-4:2) இருதயத்தின் நிறைவினுல் வாய் பேசும், வசனத்தினுல் நிறைந்திருந்தால் போதனையும் புத்தியுமே வெளிப்படும் "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக;.. ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக்கொண்டு" (கொலோ 3 ; 16)

(ஈ) ஆவியானவரின் ஒத்தாசையோடு

ஆவியினுல் நிரம்பியிருத்தலும் வசனத்தினுல் நிரம்பியிருத்தலின் கிரியையையே இங்கு பிறப்பிக்கிறது. "ஆவியினுல் நிறைந்து.. ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு" (எபே 5 :18,19) புத்தி சொல்லுதலை நாம் பயிற்சிக்கும்போது தீர்க்கதரிசன வரத்தின்

ஒருவித வெளிப்பாட்டை நாம் காணலாம் "*தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாக்கத்தக்கதாகப் பேசுகிறான்*" (I கொரி 14 : 3). நாம் கற்பனை செய்வது போல் அது அசாதாரண பெருந்தொனியாய் திடீரென்று வெளிப்படா விட்டாலும் அன்றாட வாழ்க்கையில் இயற்கையாக நால் ஒருவரிட மொருவர் பேசிக் கொள்ளும்போது வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். இதுவே யூதா சீலாவின் தீர்க்க தரிசன ஊழியமாயிருந்தது. "*யூதா சீலா என்பவர்களும் தீர்க்கதரிசிகளாயிருந்தபடியினாலே அநேக வார்த்தைகளினால் சகோதரருக்குப் புத்தி சொல்லி, அவர்களைத் திடப்படுத்தினார்கள்*" (அப் 15 : 32)

**(உ) தனிமையில்**

"*உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ் செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து*" (மத் 18 : 15). இதுவே வேதமுறை.

"*அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப் படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான்*" "*புத்திமதிகளை விரும்புகிறவனே அறிவை விரும்புகிறான்*" (நீதி 29 : 1; 12 : 1).

"*உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக; பிறன் மேல் பாவம் சுமராதபடிக்கு அவனை எப்படியும் கடிந்து கொள்ளவேண்டும்*" (லேவி 19 : 17).

**E.Z. செல்வநாயகம்**

# தொண்டு செய்வதிலும், கொடுப்பதிலும் கிடைக்கக் கூடிய மகிழ்ச்சி

கிறிஸ்தவர்கள், உலகிலேயே மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்பது மிகையல்ல ஏனெனில் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்கோ இவ்வுலகத்தில் மட்டுமே மகிழ்ச்சி கிறிஸ்தவர்களுக்கோ இவ்வுலகத்தில் மகிழ்ச்சியும் சமாதானமும் இருப்பதோடல்லாமல் கிறிஸ்துவுக்குள் கிடைக்கக் கூடிய மறுமைக்குரிய ஆசீர்வாதங்களையும் உடையவர்களாக இருக்கிறோம் (எபே 1:3

உண்மை இவ்வாறு இருக்க, மக்கள் அநேக நேரங்களில் கிறிஸ்தவர்களாகி விட்டால் சில உல்லாசங்களையும், சௌகரியங்களையும் விட்டுவிட வேண்டியிருக்கும் என்று தவறாக எண்ணிக் கொள்கிறார்கள் கர்த்தர், நன்மையான எல்லாவற்றையும் மனுக்குலம் ஆண்டு அனுபவிக்கவே படைத்திருக்கிறார். அவைகளில் யாதொன்றையும் விட்டு விட வேண்டும் என்று சொல்லவேயில்லை தீமை பயக்கும் காரியங்களை மட்டுமே விட்டு மனம் திரும்ப வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் (லூக் 13 : 3 ; அப் 17:30) ஒருவன் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதால் ஏற்படும் இழப்புகளையும், அடையப் போகிற நன்மைகளையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். கிறிஸ்தவன் ஆவதற்கு முன்பு ஒருவன் குடிகாரனாக இருந்திருக்கலாம். ஒருவேளை லாகிரி வஸ்துக்களை உபயோகித்துக் கொண்டிருந்திருக்கலாம். சூதாடும் பழக்கத்திற்கு அடிமையாக இருந்திருக்கலாம். லாட்டரிச் சீட்டுப் பயித்தியமாக இருந்திருக்கலாம். அல்லது இவைகளைவிடப் பயக்கரமான அந்தரங்க பாவங்களைச் செய்பவராக இருந்திருக்கலாம். அவைகளால் ஏற்பட்ட நன்மை தீமைகளை எண்ணிப் பாருங்கள் அவைகள் உங்களுக்கு மன சமாதானத்தையாவது ஆறுதலையாவது தந்திருக்குமா? நிச்சயமாக இல்லை என்று உங்களுக்குத் தெரியும் அத்தீய பழக்கங்கள் கொஞ்சம் கொஞ்சமாக உங்கள் உடலைப் பாதித்து ஆரோக்கியத்தைக் கெடுத்துப் போட்டது என்பது தானே உண்மை! அது மட்டுமா? அவைகளால் உங்களுக்கு ஏராளமான வீண் செலவுகள் ஏற்பட்டது என்று உணர்கிறீர்களா? அவைகளாலே யாருக்கு நன்மை? உங்கள் குடும்பத்திற்கு ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டதா? சிந்தித்துப் பாருங்கள்!

என் நண்பனே! அவைகள் உங்கள் வாழ்க்கையைப் பாழ்படுத்தி, உங்கள் ஆத்துமாவை நரகத்தில் சேர்க்கும் கொடுமையைச் செய்ததே தவிர வேறே எந்தவிதமான நன்மையையும் செய்யவில்லை அதைத்-தான் வேதாகமம் பாவம் என்று இனம் பிரித்து அவைகளைச் செய்ய வேண்டாம் என்று கூறுகிறது. "பாவத்தின் சம்பளம் மரணம் தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" என்று வாசிக்கிறோம். ரோமர் 6 : 23) ஆகவே நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் உங்கள் வாழ்க்கையில் பெரிய மாறுதல் ஏற்படும். முதலாவது, அவர் உங்கள் பாவங்களை மன்னிக்கிறார் அப்பொழுது உங்கள் மனதை அழுத்திக் கொண்டிருந்த பெரிய சுமை ஒன்று அகற்றப்பட்டதை நீங்கள் உணர முடியும் மகிழ்ச்சியும், சமாதானமும் உங்களை ஆட்கொள்வதை அறிய முடியும். இப்பொழுது நீங்கள் ஒரு புதிய நபர் உங்கள் வாழ்க்கைமுறை மாறுகிறது, உங்களுக்குப் புதிய நண்பர்கள் கிடைக்கிறார்கள், உங்கள் குடும்பத்தின் மேல் பாசம் ஏற்பட்டு அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் எழுகிறது, உங்கள் பொறுப்பு உணர்ச்சி அதிகமாகிறது, உங்களுடைய தொழிலில் முன்னைவிட அதிக அக்கறை காட்டு கிறீர்கள், உங்கள் பணிகளைச் சீரும் சிறப்புமாகச் செய்ய முற்-படுகிறீர்கள். அதைத்தான் வேதாகமம் கீழ்வருமாறு சொல்கிறது **ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புது சிருஷ்டி யாக இருக்கிறான் பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின (2 கொரி 5 : 17)**

ஆம், நண்பர்களே! ஒரு காலத்தில் நீங்கள் பாவிகளாக இருந்தீர்கள், இப்பொழுது இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள். நீங்கள் காணாமற் போயிருந்தீர்கள், இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டீர்கள் முன்பு உங்களுக்கு இருந்த நண்பர்கள் சிற்றின்பப் பிரியராயும், உலக உல்லாசத்தில் பற்றுள்ளவர்களாகவும் இருந்தீர்கள் இப்-பொழுது, சன்மார்க்கத்திலும் கர்த்தருக்குப் பயப்படும் சான்றோர்-களையும் நண்பர்களாகப் பெற்றிருக்கிறீர்கள். ஒரு காலத்தில் தவறான காரியங்களைச் செய்து கொண்டிருந்தீர்கள் இப்பொழுது அவைகளை வெறுப்பதுடன் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்கள்.

இதைக் குறித்து அப்போஸ்தலன் பேதுரு "தம்முடைய மகிமையினாலும் காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலேயே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்-துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அருளப்பட்டிருக்கிறது" என்கிறார் 2 பேது 1 : 3-5) ஆகையால் நாம் இரட்சிக்கப்பட்ட நிலையிலிருந்து வழுவிப் போகாதபடி விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும் இருளி-லிருந்து வெளிச்சத்துக்கு வந்த ஒருவன் மீண்டும் இருளுக்குள் பிரவேசிக்க விரும்புவது மதியீனம். ஒரு கொடிய நோயிலிருந்து சுகமாக்கப்பட்டவன் மீண்டும் அந்தக் கொடிய வியாதியில் சிக்குண்டு அவஸ்தைப்பட விரும்புவது புத்தியீனம் ஆகையால் நாம் நம்முடைய வாழ்க்கையில் கவனமாயிருக்க எச்சரிக்கப்படு கிறோம்.

"இப்படியிருக்க நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும் தைரியத்தோட ஞானத்தையும்

ஞானத்தோட இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோட பொறுமையையும், பொறுமையோட தேவபக்தியையும்

தேவபக்தியோட சகோதர சிநேகிதத்தையும், சகோதர சிநேகிதத்தோட அன்பையும் கூட்டி வழங்குங்கள்.

இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து, பெருகினால் உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனிவற்றவர்களுமாயிருக்க வொட்டாது

இவைகள் இல்லாதவன் எவனோ அவன் முன் செய்த பாவங்களைத்தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப் போன குருடனுமிருக்கிறான்.

ஆகையால், சகோதரரே உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை

இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்ஜியத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்'' 2 பேது 1 : 6-11)

இவ்வாறு நம்முடைய நன்மையைக் கருதி எச்சரிக்கப்படும் போது அநேகர் ஆயாசமடைந்து ஐயோ, நான் கிறிஸ்தவனுகி விட்டால் நான் எவ்வளவோ பத்தியமாக இருக்க வேண்டுமாமே, கட்டுப்பாடான வாழ்க்கை வாழ வேண்டுமாமே, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் தவருமல் ஜெபக் கூட்டத்துக்குச் செல்ல வேண்டுமாமே, காணிக்கை நிறையக் கொடுக்க வேண்டுமாமே, இன்னும் ஏதேதோ செய்ய வேண்டுமாமே என்று புலம்புகின்றார் ஒரு விளையாட்டு வீரன் ஒரு பந்தயத்தில் வெற்றி பெற வேண்டும் என்று விரும்பினுலே சில கட்டுப்பாடுகளை மேற்கொண்டு சில பயிற்சிகளைச் செய்கிருன். அவன் அப்படிச் செய்ய வேண்டும் என்பது கட்டாயமில்லை வெற்றி வாகை சூட வேண்டும் என்று அவா காரணமாக தானே மனமுவந்து அப்படிச் செய்கிருன், அது போன்று கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் ஆசீர்வாதங்களை ஒருவன் பெற விரும்பினுல் சில ஒழுங்குகளைக் கடைப் பிடிக்க வேண்டும். வெற்றியில் ஆர்வம் இல்லாவிட்டால் மேற்சொன்ன எதனையும் நீ செய்ய வேண்டியதில்லை. இது தான் கிறிஸ்தவத்தைப் பற்றி உன் கருத்து என்ருல் தயவு செய்து நீகிறிஸ்தவனுக ஆகவே வேண்டாம் உன்னுடைய மனதில் கிறிஸ்தவன் ஆவதினுல் ஏற்படும் நன்மைகளைப் பற்றிய தெளிவு இல்லாவிட்டால் நீ கிறிஸ்தவனுவதில் எவ்விதமான நன்மையும் கிடையாது.

கிறிஸ்தவ ஒழுங்குமுறைகளைச் செய்தாக வேண்டும் என்ற கட்டாயத்துக்காக அவைகளைச் செய்யாமல், அவைகளைச் செய்வதால் நன்மையுண்டு என்ற விருப்பத்தோடே செய்ய வேண்டும். அது தான் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். ஒரு நல்ல கிறிஸ்தவன் நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்க மாட்டான் மாருக நான் என்ன செய்ய முடியும்? என்றே கேட்பான். கொடுக்கிற விஷயத்திலும் எவ்வளவு குறைவாகக் கொடுத்தால் போதும் என்று கணக்குப் பார்த்துக் கொண்டிருக்க

மாட்டான் இன்னும் எவ்வளவு அதிகமாகக் கொடுக்க முடியும் என்று எண்ணுவான்.

மற்றவர்கள் தனக்குச சலாம் போட வேண்டும், பணிவிடை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்க மாட்டான் மாருக, மற்றவர்களுக்குச் சேவை செய்ய சமயம் பார்த்துக்கொண்டிருப்பான். மற்றவர்களைக் கனம் பண்ணுவதற்கு முந்திக் கொள்ளுவான். கிறிஸ்தவன் ஆவதால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளைப் பற்றியே சிந்தித்து கொண்டிப்பீர்களானல் நீங்கள் உங்கள் இதயத்தை இயேசுவுக்கு ஒப்புக் கொடுக்க வில்லை என்றே பொருள். நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்புகிறீர்கள் ஆனல் உலகத்தையும் விட்டு விட மனம் இல்லாமல் இருக்கிறீர்கள் அது தான் உங்கள் பிரச்சனை, நீங்கள் உங்கள் மனதில் சரியான தீர்மானத்தை எடுத்தாக வேண்டும். உலகத்தை நேசிக்கிறீர்களா? அல்லது இயேசுகிறிஸ்துவைப் பின் பற்றுகிறீர்களா? இப்படிப்பட்ட இருமனமுள்ளவர்களைப் பார்த்து இயேசு சொன்னுர் இரண்டு எஜமானனுக்கு ஊழியம் செய்ய ஒருவனுலும் கூடாது ஒருவனைப் பகைத்து மற்றவனை சிநேகிப்பான் அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது. (மத் 6 : 24)

ஒருவன் பாவத்தின் பிடியிலிருந்து தன்னை விடுவிக்க இவ்வுலகில் எந்த ஒரு வழியும் இல்லை என்கிற துர்ப்பாக்கியமான நிலையை உணர்ந்து வருந்திக் கொண்டிருக்கும் வேளையில் தேவனும் குமாரனுமாகச் சேர்ந்து ஒரு இரட்சியின் திட்டத்தை வகுத்து எவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்திருக்கிருர்கள் என்று அறிவானேயானல் அவன் எண்ணங்களில் தெளிவடைந்து தேவனும் கிறிஸ்துவும் அவன் மீது பொழிந்தருளிய அன்பை உணர்ந்து, வியந்து, தேவனுடைய உபதேசச் சட்டங்களுக்கு மனப் பூர்வமாகக் கீழ்ப்படிவான். அப்பொழுது பாவமன்னிப்புப் பெற்று கிறிஸ்தவ வாழ்க்கையில் ஆர்வம் காட்டி நன்றியறிதலான இதயத்தோடு கிறிஸ்துவைப் பின்பற்றுவான். அவன் இதயம் மகிழ்ச்சியால் பொங்கி வழியும் அப்பொழுது அவன் இயேசுவை விசுவாசித்து தன் ஆண்டவராகிய கிறிஸ்து எங்கெல்லாம் அவனை

அழைத்துச் செல்லுகிறாரோ அங்கெல்லாம் மகிழ்ச்சியோடு பின் பற்றிச் செல்வான். அப்பொழுது அவன் இதயத்தில் இயேசு வீற்றிருப்பார் கிறிஸ்துவுக்குள் புதிய சகோதரர்களும் சகோதரிகளும் கிடைப்பார்கள். அவர்களைச் சந்தித்து அளவளாவி ஐக்கிய மாயிருக்க விரும்பி வாரத்தின் முதல் நாளை ஆவலோடு எதிர் பார்ப்பான். அங்கே மகிழ்ந்து களி கூறி தேவனுடைய செய்திகளைக் கேட்டு இருதயத்தின் பாரம் நீங்கப் பெற்றவனாக ஒவ்வொரு நாளும் புதிய வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய மகிழ்ச்சியில் நிறைந்திருப்பான். தான் கர்த்தருக்குச் சொந்தமானவன் என்ற மகிழ்ச்சியில் அவருடைய பிரதிநிதி என்று கூறிக்கொள்வதில் பெருமிதம் அடைவான். அவருடைய பணியைச் செய்ய ஆர்வம் கொள்வான். அவனுடையதெல்லாம் கர்த்தருடையது அவனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் தன்னார்வத்தோடு செய்வான். அப்படிச் செய்வதில் அவனுக்கு ஒரே ஆனந்தம்.

எனது நண்பர்களே; மேற்சொன்ன அனுபவத்தோடு இயேசுவைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய வாழ்க்கை நெறி திறமை தாலந்து, உங்கள் பணம் இன்னும் உங்களுக்கு இருக்கும் அனைத்தையும் ஆண்டவருக்குக் கொடுங்கள். உங்கள் நண்பர்களுக்கு இயேசுவைப் பற்றிச் சொல்லுங்கள் கர்த்தருடைய சேவையில் ஈடுபடுங்கள். கர்த்தருடைய ஊழியக்காரராக மாறுங்கள் உங்கள் வேதாகமத்தை நன்றாய்ப் படியுங்கள் தனிமையிலும் பொது இடங்களிலும் ஊக்கமாய் ஜெபியுங்கள். சபையில் ஏதாவது செய்யப்பட வேண்டும் என்றால் முந்திக் கொள்ளுங்கள். நம்முடைய சகோதரர் ஒவ்வொருவருக்கும் அப்படிச் செய்ய முன் வந்தால் கிறிஸ்துவின் சபையின் வளர்ச்சி எவ்வளவாய்ப் பெருகியிருக்கும்! எத்தனை நண்பர்களும் உறவினர்களும் கிறிஸ்துவுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பார்கள் குடும்பம் குடும்பமாக ஐக்கியத்தில் வளர்ந்திருப்பார்கள்! எத்தனை ஏழை எளிய மக்கள் ஆறுதல் அடைந்திருப்பார்கள் ஆயிரக் கணக்கான அஞ்சல்முறை வேதாகமப் பாடங்கள் வெளிச் சென்றிருக்கும்! ஏராளமான கைப் பிரதிகள் இல்லங்கள் தோறும் வினியோகிக்கப்பட்டிருக்கும்! எத்தனை புதிய சபைகள் தோன்றியிருக்கும்!

கிறிஸ்தவர்களே! உங்கள் அழைப்பைக் குறித்துப் பெருமை கொள்ளுங்கள். இராஜ்ஜியமாகிய சபையில் அங்கமாயிருப்பதினால் களி கூறுங்கள். கர்த்தருடைய காரியங்களில் வைராக்கியம் கொண்டு அவருடைய சுத்த சுவிசேஷத்தைப் பரப்புவதில் ஆர்வம் கொள்ளுங்கள் சிலபேர் கர்த்தருடைய வேலையைப் பங்கு போட்டு தனக்கு இவ்வளவு செய்தால் போதும் என்று இரண்டொன்றைச் செய்து விட்டு விலகிக் கொள்வர். என் பங்கு அடுத்தவன் பங்கு என்று பேசிக்கொண்டு திரியாமல் என்னால் முடிந்த அனைத்தையும் கர்த்தருக்காகச் செய்வேன். மற்றவர்கள் என்ன செய்வார்கள் செய்யமாட்டார்கள் என்பது பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. நான் ஆண்டவருக்காக என்ன செய்கிறேனோ அதற்குரிய ஆசீர் வாதம் எனக்கு நிச்சயமாய்க் கிடைக்கும். மேலும் நாம் நம்மால் முடிந்ததைச் செய்யும் போது அதைப் பார்த்துக் கொண்டிருக்கிற மற்றவன் கொஞ்சமாவது செய்வதற்கு முற்படுவானே.

ஒரு காரியத்தை நாம் நன்றாக மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற நேரத்தை நாம் அவருக்காக பயன்படுத்தாமல் போவோமானால் நாம் அநேக ஆசீர்வாதங்களை இழந்து போவோம், நாம் அவரை முழுமனதோடு பின்பற்றி அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தால் அவர் நம்மோடிருந்து நமக்கு ஒத்தாசை செய்து நம்மை மேன்மைப் படுத்துவார். நாம் நினைப்பதற்கும் அதிகமான ஆசீர்வாதத்தால் நிரப்புவார். நாம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தாலந்து, திறமை, நேரம் பணம் வாய்ப்பு ஆகியவைகளை ஆண்டவருக்காக செலவிட மறுத்தால் அதற்கேற்றவாறு அவரும் நமக்கும் அளிக்கும் ஆசீர் வாதத்தைக் குறைத்துக் கொள்வார். இந்த இரகசியத்தை இது வரை புரிந்து கொள்ளாமல் இருந்தால் நீங்கள் இனிமேலாவது அவரை ருசித்துப் பார்க்கும்படி உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன் உங்களுடைய இதயத்தை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தால் நீங்கள் அவருடைய உபதேசச் சட்டங்களுக்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிவீர்கள் அப்பொழுது மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் காண்பீர்கள். நான் சொல்வது உண்மையோ இல்லையோ என்று சோதித்துப் பாருங்கள்

J. C. கோட்

# இழப்பே ஆதாயம்

கிறிஸ்தவ வாழ்க்கை பற்றி பல கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் இதை ஒரு மலர் படுக்கை வாழ்க்கை என்கின்றனர், வேறு சிலர் முள் படுக்கை வாழ்க்கை என்று வாதிடுகின்றனர். மூன்றுமவர் கிறிஸ்தவ வாழ்க்கையா என்ன அது? என்று கேட்கும் நிலையில் உள்ளனர்.

''புசிப்போம், குடிப்போம், பூரிப்பாயிருப்போம்'' என்ற உலகியல் வாழ்க்கைத் தத்துவத்திலிருந்து கிறிஸ்தவ நெறி முற்றிலும் மாறுபட்டது. சுபாவ மனிதன் உலகை தனதாக்கும் முயற்சியில் தன்னையே இழந்துவிடுகிறுன். உலகை சாதகப்படுத்திஞல் ஆத்மா இழந்து போகிறது. ஆஞல் ஆத்துமாவை ஆதாயபடுத்த உலக பற்றை இழந்தாக வேண்டும்.

மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்திஞல் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? (மத் 16:26) ஆண்டவரின் இந்த உன்னதமான கருத்தை பலர் புரிந்து கொள்ளாமல், இருப்பது வேதனை. நிழலுக்காக நிஜத்தையும், இம்மைக்காக மறுமையையும் விட்டுக் கொடுக்க விரும்பும் இவர்கள் தங்கள் பண்டமாற்று வணிகவியல் பேரத்தில் பெரிய தவறு செய்கின்றனர். இழப்பை ஆதாயமென்றும், உண்மை ஆதாயத்தை இழப்பு என்றும் தீர்த்து, தங்கள் தவருன பொருளியல் பார்வையால் நித்திய இழப்படைகின்ருர்கள்.

வருந்துமளவிற்கு, கிறிஸ்தவர் பலரும் இந்த கொள்கையைப் பின்பற்ற சற்றும் தயங்குவதில்லை. இவ்வுலகிற்கு தான் அந்நியன், வழிபோக்கன் என்பதை முற்றும் மறந்து விடுகின்றனர். (1 பேது 2:11, 2:20)

கேவலம் கூழுக்காக பிறப்புரிமையை விட்டுக் கொடுத்த ஏசாவை போலவும், முப்பது வெள்ளிகாசுக்காக தன்னை இழந்து விட்ட யூதாசை போலவும் பலர் தவருன வாழ்க்கை பேரம் பேசுகிருர்கள். (எபி 12;15-17, மத் 27:1-5) கிறிஸ்தவரில் பலர்

ஆதாயம் என்று எண்ணிச் செய்கிறவைகள், அவர்களுக்கு நித்திய இழப்பைக் கொண்டு வருகின்றன. ஆகவே சீசத்துவ வாழ்க்கையில் எதுதான் உண்மையான ஆதாயம் என்பதை தெரிந்து கொள்வோம். இழப்பே ஆதாயத்திற்கு வழி என்ற உயரிய கருத்தை விளக்கும் சில வேதாகம சான்றுகளை கூர்ந்து கவனிப்போமாக.

முதலாவதாக, இயேசுவுக்காக உலக செல்வத்தை முறையாக செலவிடுவது உலக கண்ணோக்கில் இழப்பாகத்தெரிந்தாலும் அதுவே பரலோகில் நித்திய சேமிப்பாக மாறுகிறது.

அதற்கு இயேசு "நீ சற்குணனாயிருக்க விரும்பினால், போய் உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது, பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு என்னை பின்பற்றி வா" என தம்மை பின்பற்றி வர விரும்பின வாலிபனுக்கு ஆலோசனை கூறினார். (மத் 19:21) அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையை கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய் விட்டான். (மாற் 9:22)

அருள்நாதரிடம் வந்த அனைவரும் சுகம், விடுதலை, மன்னிப்பு சமாதானம் பெற்றுத்தான் திரும்பினர். ஆனால் ஐயகோ! சமாதான பிரபுவிடம் வந்த இவன் மனமடிந்து போகிறானே! ஜீவதண்ணிரிடம் வந்த இவன் தாகமாகவே திரும்பிப் போகிறானே! எத்துனை வேதனை! என்னதான் காரணமாயிருக்கும்?

இயேசா - காசா? அருளா - பொருளா? மறுமையா - இம்மையா? நிழலா - நிஜமா? எது? என்ற கேள்விக்கு, காசுதான், பொருள் தான், நிழல்தான், இம்மைதான் — இவைகள் தான் வேண்டும். இயேசுவைப் பின்தொடரும் வாழ்க்கையில் இழப்புகள் வருமானால் அந்த இயேசுவே வேண்டாம் என்ற தவறான தெரிவால் தான் இவன் மனமடிந்து, துக்கமாய், நித்தியத்திறகும் இழந்து போனான். எத்தனை தவறான பொருளியல் பார்வை! எவ்வளவு தவறான முன்னுரிமை! ஆனால் உலக செல்வத்தை இயேசுவுக்காய் முறையாய் செலவிட இந்த வாலிபன் முன்வந்திருந்தால் அதுவே அவனுக்கு பரலோகில் நித்திய சேமிப்பாக மாறியிருற்க்கும். முன்னர் ஈட்டிய

செல்வமே ஒருவன் இயேசுவை பின்பற்ற தடையாக இருக்குமானால், செல்வம் ஈட்டுவதற்காகவே இயேசுவை பின்பற்றுபவரின் நிலை என்ன?

முன்னர் ஒரு சமயம் ஒரு வெளிநாட்டு சகோதரரோடு அவரது வாகனத்திற்கு எரிபொருள் நிரப்ப சென்றிருந்தோம். செல்வந்தனான அந்த எரிபொருள் சேமிப்பு கிடங்கின் உரிமையாளர் அடியேனிடம் வந்து, "இந்த வெளிநாட்டு மிஷினரியிடமிருந்து கணிசமான ஒரு தொகை கிடைத்தால், தாம் மதம் மாறி பிரச்சார வேலைக்கு வர விரும்புவதாக கருத்தாய் தெரிவித்துக் கொண்டார். அந்த மனிதனது உள்ளக் கிடக்கை நமக்கு புரிகிறது! இன்றும் பலர் இப்படியே ஏதாகிலும் கிடைக்குமானால் மனமாறவும் ஊழியம் செய்யவும் விரும்புவர். நினைத்தது நடக்காவிட்டால் குணமாறி விடுவர். நடந்துவிட்டால் நிலைமாறி விடுவர். இந்த இழிநிலை மாறி தங்கள் பொருளை இயேசுவுக்காய் செலவிடக் கற்றுக் கொள்ளும் காலம் எப்போது வரும்? லூக்கா 12:33-34 வசனங்களை வாசியுங்கள். "இவ்வுலகத்தில் ஐசுவரியமுள்ளவர்கள் ........................... நித்திய ஜீவனை பற்றிக் கொள்ளும்படி வருங்காலத்திற்காக நல்ல ஆதாயத்தை பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்கு கட்டளையிடு (1 தீமோ 6:17-19)

இயேசுவுக்காய் செலவிடுவது, இழப்பாக கருதப்பட்டாலும், அதுவே பரலோகில் உண்மை ஆதாயமாக சேமிப்பாக மாறுகிறது.

இரண்டாவதாக, இயேசுவுக்காக சமுதாய அந்தஸ்து, மற்றும் குடும்ப உறவுகளை முறைபடுத்தி அமைத்து கொள்வது சற்றுக் கடினமாகத் தோன்றினாலும் அதுவே நூறு சத இழப்பீட்டையும், மறுமை வாழ்க்கையையும் நமக்கு உறுதி செய்கிறது.

நாம் பெறவிருக்கும் பலனைத் தெரிந்து கொண்டால் அதற்காக எந்த தியாகமும் செய்ய முன்வருவோம். நமது பிரச்சனையே இழப்பில் தான், நாம் பெற விரும்பும் பலன் அல்லது ஆதாயம் இருக்கிறது என்பது தெரியாமல் இருப்பதுதான்.

"ஆகிலும் எனக்கு லாபமாய் இருந்தவைகள் எவைகளோ, அவைகளை கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று

எண்ணினேன்"......... எண்ணிக்கொண்டிருக்கிறேன். (பிலி 3:7-8). இயேசுவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன், குப்பையுமாக எண்ணுகிறேன் (வச 11). என்ற பவுலின் கொள்கை முழக்கம் எவ்வளவு சரியானவைகள்! சவாலான வைகள்!

இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின் பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும்? (மத் 19:27) இது பேதுருவின் கேள்வி. இழப்பீடு ஏதேனும் உண்டா? அல்லது ஏமாற்றம் தானா? அதற்கு இயேசு மறுஜென்ம காலத்திலே .........என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரனை யாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயை யாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது விட்ட வன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்து கொள்ளுவான்". (மத் 19: 27-29, மாற் 9: 29-30). இயேசுவுக்காய் செலவழிக்கப்படும் ஒரு கோப்பை தண்ணீருக்கும் இழப்பீடு உண்டு. (மத் 10:42).

முன்னுரிமைப் பட்டியலில் இயேசுவுக்கு முதலிடமளித்து நூறுசத ஆதாயமும் மறுமை வாழ்வும் பெறக்கற்றுக் கொள்வோமாக. சமுதாய, குடும்ப உறவுகளை மாற்றி அமைப்போமாக!

மூன்றாவதாக இயேசுவினிமித்தம் நமது சமூக புகழ், நற்பெயர் இவை பாதிக்கப்படுவது இழப்பாக தோன்றினாலும் அதுவே நித்திய பலனைக் கொண்டு வருகிறது. ஊழியத்தில் துன்பம், இகழ்ச்சி, பின்னடைவு, சோர்வு வரும்போது சலிப்படைகிறோம். அவரைவிட நான் என்ன பெரிய தவறு செய்து விட்டேன்? எனக்கு ஏன் இப்படி ஒரு நிலை? ஒட்டகத்தை விட்டு விட்டார்கள். என் தவறு கொசு மாதிரி, என்னை போட்டு வடிகட்டுகிறார்களே? என்ற வாதங் கள் நம் செவிகளில் விழுகின்றன. கர்த்தருடைய சல்லடையில் ஒட்டகங்களும் மாட்டிக் கொள்ளத்தான். போகின்றன! சந்தேகமே வேண்டாம். சிட்சை வேறு; தண்டனை வேறு.

கடமையுணர்வு, கொள்கை பற்று எல்லாம் இருக்கவேண்டியவை தான், அதற்காக பெயரை கெடுத்து கொள்ள வேண்டுமா? பாதகம் ஏற்படுமளவிற்கு அதை அனுசரிக்க வேண்டுமா? இப்படி பல எதிர்

மறை வாதங்களும் இருக்கின்றன. இதனுல் பலர் நமக்கேன் வம்பு நமக்கு காரியம் ஆகிறது. வீணுக எதற்காக என்று "தண்ணீர் தண்ணீர்" பாணியில் சிந்தித்து கொண்டிருக்கின்றனர்.

நமது ஆண்டவனை "தச்சன் மகன், உணவுப்பிரியன், பாவிகளின் நண்பன்" என்றழைத்து இகழ்ந்தனர். ஸ்நானகனை "பேய் பிடித் தவன்" என்றிகழ்ந்தனர். பவுலை, "வாயாடி, உலகை கலக்குகிற வன்" என்றனர். (லூக் 7: 33-34, அப் 17 :6,18) இவர்களிலும் நாம் பெரியவர்களா? தங்கள் புகழ், நற்பெயர் கெட்டுவிடும் என்பதற்காக வோ, மக்கள் தீர்ப்புக்கு அஞ்சியோ தங்கள் இலட்சியத்தை இவர்கள் விட்டுக் கொடுக்கவில்லை (அப் 5: 41-42). எத்தனை சந்தர்ப்பங்களில் நாம் எங்கே நமது பெயருக்கு களங்கம் வந்து விடுமோ என அஞ்சி நன்மையையும் செய்யாமலிருந்திருக்கிறேம் என்று எண்ணிப் பார்ப்போம்.

"எல்லா மனுஷரும் உங்களை குறித்து புகழ்ந்து பேசும் போது உங்களுக்கு ஐயோ" (லூக் 6 : 26)

ஆனுல் என்னிமித்தம் உங்களை நிந்தித்து ............ ............சந்தோசப்பட்டு களி கூறுங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் (மத் 5 : 11-12 1 பேது 2 -22). கர்த்தரிடம் நல்ல பெயரெடுப்பதே பிரதானம்.

நான்காவதாக இயேசுவுக்காய் வாழும் சுய வெறுப்பு வாழ்க்கை மூலம் வாழ்வை ஆதாயப்படுத்துகிறேம்.

"தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை காப்பான் (மத் 10 : 39) ஒருவன் என்பின்னே வர விரும்பினுல் அவன் தன்னைத்தானே வெறுத்து தன் சிலுவையை அனு தினமும் எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக்கடவன்...... ........... மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன்னைத்தான் கெடுத்து நஷ்டப்படுத்தினுல் அவனுக்கு லாபம் என்ன? (லூக் 9 : 23-25)

சுயவெறுப்பு வாழ்க்கையின் பலனை ஆண்டவர் ஒரு உதாரணத்தின் மூலம் விளக்குகிறார். "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனை கொடுக்கும்" (யோவா 12 : 24-25). தன் சுயத்தை, சுய வெறுப்பு விருப்புகளை அழித்துக்கொண்டு, கிறிஸ்துவுக்காக வாழ்கிறவனே இம்மையிலும் மறுமையிலும் தன்னை ஆதாயப்படுத்துகிறான் (1 திமோ 4:8). இந்த வாழ்க்கையில் பல விருப்பு வெறுப்புகள், தெரிவுகள் அடிபடுமென்றாலும், நித்திய பலனை ஆதாயமாகக் கொண்டு வருகிறது.

கடைசியாக, கிறிஸ்துவுக்காக நம்மை தாழ்த்துவதன் மூலம் அவரால் உயர்த்தப்படுகிறோம். சிலர் தங்களை உயர்த்திக் கொள்ளவும் முதன்மைப்படுத்தவும் விரும்புவதுண்டு. இதற்காக சிலர் மலிவு விளம்பரங்கள், கவர்ச்சி அறிக்கைகள் போன்ற இழிவான யுக்திகளை கையாளுவதுமுண்டு.

பாபேல் கோபுரத்தின் மூலம் தங்களுக்கு ஒரு பெரிய பெயரை உருவாக்க முயற்சித்த மக்களை தேவன் சிதறடித்தார். பெருமை பாராட்டின பாபிலோனிய பேரரசன் நெபுகாத்நேசர் விலங்குகளோடு சஞ்சரித்தான். யூதாஸ், தெயுதாஸ் போன்ற அதிரடி, சுய நியமன தலைவர்களின் கதி! அதோ கதி!!

நமது ஆண்டவர் தம்மை தாழ்த்தினார். சீசர்களின் கால்களை கழுவினதின் மூலம் தாழ்மைக்கும் சேவைக்கும் ஒரு புதிய சரித்திர பரிமாணம் கொடுத்தார். ஆதலால் தேவன் எல்லாவற்றிக்கும் மேலாக அவரை உயர்த்தி... பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும் படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார். (பிலி 2 ; 6-11)

துரதிஷ்டவசமாக, யார் பெரியவன் என்ற சண்டையில் எல்லாரும் சிறியராக மாறிவருகிறார்கள் "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன்' தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னை

தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் (மத் 23 : 11-12) தான் ஒன்று மில்லாதிருந்தும் தன்னை ஒரு பொருட்டென்று எண்ணுகிறவன் தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான் (கலா 6 : 3).

நம்மை குறைத்து மதிப்பிட்டுக் கொள்வதும், கடையனுக் நடத்திக் கொள்வதும் அந்தஸ்து ரீதியாக சற்று இழப்பாகத் தெரிந் தாலும் அதுவே உயர்வுக்கும், முதன்மைக்கும் வழிகோலுகிறது.

சகோதரரே! கிறிஸ்தவ வாழ்க்கையின் லாப நஷ்ட கணக்கை பற்றிய நமது கருத்து என்ன? சிஷத்துவத்தின் விலை என்ன? அதை செலுத்த விரும்புகிறோமா? நமது முன்னுரிமை பட்டியலில் யாருக்கு முதலிடம்? நாம் லாபம் என கருதுபவைகள் உண்மையில் லாபகரமானவைகளா? அல்லது நிழலை நிஜமென்றும் நகலை அசல் என்றும் தணிக்கை செய்கிறோமா? இயேசுவுக்காய் இழக்கப்படுபவை கள் அனைத்தும் உண்மையான ஆதாயமாக மாறுகின்றன. இயேசுவுக்கான பொருளியல் இழப்பு, அந்தஸ்து இழப்பு. புகழ் இழப்பு, சுயவெறுப்பு மற்றும் தாழ்மை ஆகியவை அனைத்தும் நூறு சத ஈட்டுறுதி பெறுவதுடன், மறுமை வாழ்க்கையையும் சாதகப் படுத்திக் கொடுக்கிறது.

இழப்பே உண்மை ஆதாயத்திற்கு வழி என்ற உயரிய கிறிஸ்தவ நெறியை உணர்ந்து பின்பற்றுவோமாக! கிறிஸ்தவ வாழ்க்கை பற்றிய நமது தப்பு கணக்குகள், பொய் மதிப்பீடுகள் அற்ப பேரங் களைப் புரட்டி, திருத்தி எழுதுவோமாக!

"கிறிஸ்துவுக்காய் இழந்தவர் எவரும் தரித்திரரானதில்லை. இராஜ்ஜிய மேன்மைக்காய் கஷ்டம் அடைந்தோர் நஷ்டப்பட்டதில்லை. ஆகவே நாமும் பவுலுடன் சேர்ந்து, ஆகிலும் எனக்கு லாபமாய் இருந்தவைகள் எவைகளோ அவைகளை கிறிஸ்துவுக்காய் நஷ்டமென்று எண்ணினேன்..... நஷ்டமென்று விட்டேன், குப்பையுமாக எண்ணுகிறேன். என்று சொல்வோமா? இழப்பால் வரும் ஆசிர்வாதங்களை குவிப் போம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

P. பால்ராஜ்

# இயேசு விரைவில் வருகிறாரா?

உங்களை விரைவில் சந்திக்க வருவதாக உங்கள் நண்பரிடமிருந்து கடிதம் வந்துள்ளது. என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் அவரை எப்போது எதிர்பார்ப்பீர்கள்? ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் கடந்த பின்னரா? அல்லது ஒரு சில நாட்களுக்குள் வருவதாகக் கருதுவீர்களா? நிச்சயமாக ஒரு குறுகிய காலத்திற்குள், அதாவது சில நாட்களுக்குள் அவர் வருவார் என எதிர்பார்ப்பீர்கள் அல்லவா? ஏனெனில் 'விரைவில்' என்னும் வார்த்தை வருடங்களையல்ல, சில நாட்களையே குறிக்கும் என நீங்கள் அறிவீர்கள். பல நாமகரண சபை போதகர்கள் 'இயேசு விரைவில் வருகிறார்' என பல ஆண்டுகளாக எழுதியும் போதித்தும் வருகிறார்கள். பல சுவர்களிலே கொட்டை எழுத்துக்களில் இவ்வாசகங்கள் எழுதப்பட்டு வருவதையும் நாம் காண முடிகிறது. அவர்கள் நமக்கு எதைச்சொல்ல விரும்புகிறார்கள்? இயேசு உலகத்தை நியாயந்தீர்க்கவும், அவருடைய பரிசுத்தவான்களோடு இவ்வுலகில் 1000 ஆண்டுகள் ஆட்சி செய்யவும் இந்த நாட்களிலே இயேசு வருகிறார் என மக்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறார்கள். அவர்களுக்கு இக்காரியம் எவ்வாறு தெரியும்? வேதாகமம் இவ்வாறு போதிக்கிறதா? இவ்வுலகை நியாயம் தீர்க்க கிறிஸ்து ஒரு நாள் வருவார் என்று நிச்சயமாக வேதாகமம் போதிக்கிறது ஆனால் அந்த நாள் என்று வரும் என உலகிலுள்ள எந்த மனிதனோ அல்லது பரலோகத்திலுள்ள தூதனோ அறிய மாட்டார்கள். தங்கள் கற்பனைகளில் உதித்தபடி, 'இயேசு விரைவில் வருகிறார்' என பல ஆண்டுகளாகப் போதித்து வருவோர், தாங்கள் கள்ளப்போதகர்கள் என்ற உண்மையை மீண்டும் மீண்டுமாக நிரூபித்துக்கொண்டு வருகின்றனர். ஏனெனில், அவர்கள் கூறுவதுபோல இயேசு இன்னும் வரவில்லை; என்றாலும், தொடர்ந்து பல வருடங்களாக இயேசு விரைவில் வருகிறார் என்றே அவர்கள் கூறி வருகின்றனர். இவ்வாறு நான் குறிப்பிடுவதால், இயேசு மீண்டும் வரவே மாட்டார் என பொருள் அல்ல. நிச்சயமாக அவர் ஒரு நாள் வருவார்; ஏனெனில் வேதாகமம் அவ்வாறு கூறுகிறது. ஆனால் எப்போது என்று நமக்குத் தெரியாது. அப்போஸ்தலர் நடபடி 17ம் அதிகாரம் 31ம் வசனத்திலே, அப்போஸ்தலர் பவுல் கூறுவது போல, உலகை

நியாயந் தீர்க்க இயேசு ஒரு நாள் மீண்டுமாக வருவார் எனக் கூறுவது ஒன்றும் தவறல்ல; ஆனால் 'இயேசு விரைவில் வருகிறார்' என்ற கூற்று மக்களை திசை திருப்பி, நமது தேவனே போதிக்காத ஒன்றை மக்களை நம்பவைக்கச் செய்யும் ஏமாற்று முயற்சியேயாகும். மீண்டும் எப்போது வருவீர் எனக்கேட்ட தமது சீடர்களுக்கு இயேசு கூறினார்; *"அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்"* (மத் 24 : 36) இயேசு கூறியதைக் கவனித்தீர்களா? எந்த ஒரு மனிதனோ, பரலோகத்திலுள்ள ஒரு தூதனோ அறியமாட்டான் என அவர் தெரிவித்தாரே; தான் மீண்டும் வருவது எப்போதென்று யாருக்கும் தெரியாது என இயேசுவே கூறிய பின்பும், 'இயேசு விரைவில் வருகிறார்' என்று யாராவது சொல்லிக் கொண்டு திரிந்தால் அது ஒன்று அறியாமை அல்லது ஏமாற்று வித்தை.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றி, பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர் பவுல் கீழ்க்கண்டவாறு வேதாகமத்திலே எழுதுகிறார்: *"சகோதரரே, இவைகள் நடக்கும் காலங்களையும் சமயங்களையும் குறித்து உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை. இரவிலே திருடன் வருகிற விதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்"* (1 தெசலோ .:1,2). அப்போஸ்தலனாகிய பேதுருவும் கீழ்க்கண்டவற்றைக் கூறி கிறிஸ்தவர்களுக்கு அறிவுறுத்துகிறார்: *"கர்த்தருடைய நாள் இரவில் திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்"* (. பேதுரு 3:10) இவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்ளுவது என்ன? எவ்வித முன்னறிவிப்புமின்றி திடீரென இயேசு மீண்டும் வருவார் என்று மட்டுமல்ல, அவர் வரும் வேளை இப்பூமியும் இதிலுள்ள சகலமும் எரிந்து போயிருக்கும் என்றும் நாம் தெரிந்து கொள்ளுகிறோம். ஆகவே, சிலர் தவறாக நம்பி போதித்துக் கொண்டிருப்பது போல், இயேசு இவ்வுலகிற்கு மீண்டும் வந்து 1000 ஆண்டுகள் ஆட்சி செய்யப் போவதில்லை என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

தனது இரண்டாவது வருகை எப்போது என எந்த ஒரு மனிதனோ, பரலோகத்திலுள்ள தேவதூதனோ அறிய மாட்டான் என்று தனது சீடர்களுக்குத் தெரிவித்த கிறிஸ்து, தொடர்ந்து அவர்களுக்கு அறிவிக்கிறார்: நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனித குமாரன் வருங்காலத்திலும் நடக்கும், எப்படி யெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும் பெண் கொண்டும் பெண் கொடுத்தும், ஜலப்பிளேயம் வந்து அனைவரையும் வாரிக் கொண்டு போகு மட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனித குமாரன் வருங்காலத்திலும் நடக்கும் .. உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாறென்று நீங்கள்அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள் திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்-திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிட வொட்டானென்று அறிவீர்கள். நீங்கள் நினையாத, நாழிகையிலே மனிதகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்." (மத். 24 : 37 31 & 42-44)

அப்போஸ்தலர்களில் ஒருவரான யோவான் எச்சரித்துக் கூறுவதைப் பாருங்கள் : "பிரியமானவர்களே, உலகத்திலே அநேகங்_ கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள்தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1 யோவான் 4 : 1) ஒரு துண்டுத்துணியின் சரியான அளவை அறிய ஒரு அளவுகோலைப் பயன்படுத்துகிறோம். அதே போல ஒரு பொருளின் சரியான எடையைத் தெரிந்துகொள்ள எடைக்கல்லை உபயோகிக்கிறோம். இதுவே தேவனின் வார்த்தை எனத் தெரிந்து கொள்ளமட்டும், ஏன் அதற்குரிய 'அளவுகோலான' வேதாகமத்தை ஒப்பிட்டுப் பார்க்க தவறி விடுகிறோம்? ஆவியை சரியான வழியில் சோதித்துப் பார்க்கவோ, அல்லது ஒருவரின் போதனை சரியா, தப்பா எனத் தெரிந்து கொள்ளவோ 'வேதாகமத்தை நாடுவதே ஒரே நிச்சயமான வழியாகும். மிகவும் வேதனை

அளிக்கும் காரியம் என்னவென்றால், முதலாம் நூற்றாண்டிலே, பெரோயா பட்டணத்தார் அப்போஸ்தலர்களாகிய பவுல் ஆகியோர் போதித்த வசனங்களை மனோவாஞ்சையாய் ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தது போலப் பார்க்கத் தவறி விடுகிறார்களே என்பதுதான். (அப் 17 : 11). வேதாகமத்தின் பெயரால் எவராம் எதைப் போதித்தாலும் அவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டு ஜீரணித்துக் கொள்ளும் பல மக்களையே இன்று நாம் காண்கிறோம் இவ்வித அலட்சியப் போக்கே இன்று நம்மிடையே மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட பல நாமகரண சபைகள் தோன்றக் காரணமாகும். வேதாகமத்தில் காணப்படாத பல பெயர்களையும் பட்டங்களையும் அவர்கள் சூடிக் கொள்ளுகின்றனர்; மாறுபாடான போதனைகளைப் போதித்து தங்கள் மனம் போன படியே நடந்துகொள்ளும் அதே வேளையில், வேதாகமத்தின் படியே நடப்பதாகக் கூறுகின்றனர். கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டில் கூறப்படாத ஆராதனை முறைகளை கடைப்பிடிக்கின்றனர். இத்தகையோரைப் பற்றி இவ்வுகில் தான் வாழும் போதே கிறிஸ்து கூறியிருக்கிறார் :

*"இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது, இவர்கள் மனிதருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்".* (மத். 15 : 8,9)

கிறிஸ்து மீண்டும் எப்போது வருவார் என யாருக்கும் தெரியாது என்பது உண்மையாக இருந்தாலும்; அவரின் வருகை பற்றி அப்போஸ்தலன் பேதுருவின் எச்சரிக்கையை நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். *"தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்."* (2 பேதுரு 3 : 9) பாவத்துக்கும் அறியாமைக்கும் ஒரு ஆத்மா கூட மரித்துப்போக அவர் விரும்பவில்லை, மாறாக, சகல மக்களும் மனஸ்தாபப்பட்டு, தங்கள் வழிகளை மாற்றிக் கொண்டு அவரால் இரட்சிப்படைய விரும்புகிறார்,

எனவேதான் இயேசு இன்னும் வரவில்லை. வேதாகமத்தின் பிரகாரம், இயேசு வருகையில் இப்பூமியும் இங்குள்ள சகலமும் மறைந்து போயிருக்கும் (2 பேதுரு 3 : 10) ; யோவான் 2 : 17) ஆகவே இப்பூமியில் அவர் மீண்டும் வருவதில்லை. ஆனால் மேகங்களிடையே அவர் வருவார்; உயிர்த்தெழுந்த அவருடைய பரிசுத்தவான்கள் யாவரும் மேகத்திலே அவரை சந்தித்து நித்தியத்திற்கும் அவரோடு பரலோகத்திலே வாழச் செல்வார்கள் (அப் 1:1-11; 1 தெசேலோ 4 : 16, 17) நியாயந்தீர்க்கும் நாளிலே பாவிகளின் நிலை பற்றி கிறிஸ்து கூறும்போது : இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்'' (மத். 25 : 46) என்றார்.

கிறிஸ்து எப்போது வருவார்? யாருக்கும் தெரியாது. தெரிந்து கொள்ள வழி எதுவுமில்லை. ஆனால் நமது பாவங்களுக்காக அவர் சிலுவையில் மரித்தார் என முழு மனதோடு விசுவாசித்து; நமது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, தேவன் நம்மில் எதிர்பார்ப்பது போல கிறிஸ்துவை முன்னுதாரணமாகக் கொண்டு, அவரைப்போல இவ்வுலகில் தினமும் வாழ முயன்றால், அவரின் வருகையின்போது நிச்சயமாக நம்மை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்கு அவரோடு கூட நித்திய ஜீவனை அளித்திடுவார் என உறுதியாக நம்பலாம். வேதாகமம் கூறுவதுபோல, மோட்சத்திலே "அவருடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமும் இல்லை, துக்கமும் இல்லை, அலறுதலுமில்லை வருத்தமும் இல்லை; அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார், அவர்கள் சதா காலங்களிலும் அரசாளுவார்கள்" (வெளி 21 : 4 & 22 : 5).

இயேசு மீண்டுமாக வரும் போது. அவரை சந்திக்கவும், அவரோடு வாழ மோட்சத்திற்கு செல்லவும் நாம் தயாராக இருக்கிறோமா? இதுவே இன்று நாம் உடனடியாக விடை காண காண வேண்டிய அதிமுக்கியமான ஒரு கேள்வி. நமது பதில் என்ன?

சன்னி டேவிட் S. S. ராஜன்

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**IHNDI** Satya Susamachar-Speaker: Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi-110049.
Thursdays-7: 15 to 7-30 P. M.
Fridays-- 8: 00 to 8:15 P. M.
Saturdays-8 00 to 8:15 P. M.
Sundays-9 00 to 9: 15 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker: P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker: Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

# வாசக அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

திருமறை ஆசான் வாசகர்களின் முகவரிகளை மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்தும் பணி தொடர்ந்து நடை பெறுகிறது. இதுவரை தங்கள் முகவரிகளை எழுதி அனுப்பாதவர்கள் உடனே அனுப்பி உதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். நம்முடைய விலாசம் தான் அவர்களுக்குத் தெரியுமே என்று மெத்தனமாக இராதீர்கள். தயவு செய்து ஒத்துழையுங்கள். நன்றி.

1. பெயர்
2. முழு முகவரி
3 பின்கோடு
4. மாவட்டம்

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press Erode-638 003.

Editor. E. Z. Selvanayagam.

TO

PRINTED MATTER

BOOK-POST

If undelivered please return to :

The Editor

THIRUMARAI AASAAN

Post Box No: 58 ERODE - 638 001.